**Volume : 4, Issue : 1, May 2020** **Pg. No. 30 - 41**



புதிய அவையம்

காலாண்டு மின்னிதழ்

ISSN : 2456-821X

# *பிற்காலப் பாண்டியரின் காசுகள்*

***மு.கயல்விழி,***
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ்த் துறை,*
*பச்சையப்பன் மகளிர் கல்லூரி,*
*காஞ்சிபுரம்-631502.*
*கைபேசி: 9677398808*
*மின்னஞ்சல்: kayalarul22@gmail.com*

===================================================================

***முன்னுரை***

*பொருளாதாரம் ஒரு நாட்டின் முதுகெலும்பைப் போன்றது. பொருளியல் வளமின்றி எத்துறையும் இயங்கவியலாது. அத்தகு இன்றியமையாத பொருளாதாரத்துக்கு அடிப்படை காசுகளே. காசு அல்லது பணமின்றி நாட்டின் பொருளியல் நிலை இம்மியும் அசையாது. பண்டைய காலத்தில் தமிழர்கள் பண்டமாற்று முறையைப் (Barter System) பின்பற்றினர். இம்முறையில் பலவிதக் குறைகளும், குழப்பங்களும் தோன்றின. எனவே காலப்போக்கில் இம்முறை வழக்கொழிந்தது. இதன் பின் காசுகள் தோன்றிப் புழங்கின. தமிழகத்தில் சங்கக் காலத்திலேயே நாணயப் புழக்கம் இருந்தது. அக்காலக் காசுகள் பொன், வெள்ளி, செப்பு வடிவில் வெளியிடப்பட்டன. முடிவுடை வேந்தர் மூவருமே காசுகளை வெளியிட்டாலும் பாண்டியருடைய*

காசுகளே அதிக அளவில் கிடைத்தன. பாண்டியர் காசுகள் அதிகம் கிடைப்பதற்குக் கொற்கையில் அவர்கள் நிகழ்த்திய உலகளாவிய முத்து வணிகமே முக்கியக் காரணமாகும்.

பாண்டியரின் நாணயச் சாலை கொற்கையில் "அக்கச் சாலை" என்ற பெயருடன் செயல்பட்டு வந்தது (இராமன்.கே.வி. ப:203). பல்வகையான பாண்டியரின் காசுகள் அவர்களின் செல்வ நிலையை எடுத்துக்காட்டின. சங்கக் காலப் பாண்டியரைப் போன்றே பிற்காலப் பாண்டியரும் காயல் பட்டிணத்தில் முத்து வணிகத்தைச் சிறப்புடன் செய்தனர். எனவே அவர்கள் பல்வகையான காசுகளை வெளியிட வேண்டியவரானார்கள். பாண்டிய மன்னர்கள் தம் பெயரில் காசு வெளியிடுதலைப் பெருமையாகக் கருதினர். இது அவர்களின் சிறப்புப் பெயர்களுடன் வெளியிட்ட காசுகளைக் கொண்டு அறியலாம். பாண்டியரின் காசுகள் மூலம் மன்னரின் பெயர்கள், பட்டங்கள், ஆட்சிப் பரப்பு, செல்வச் செழிப்பு, கால அளவு போன்ற அரிய தகவல்களைத் தாங்கி நிற்கின்றன. இக்காசுகள் பிற்காலப் பாண்டியர் பற்றிய அரிய தகவல்களை நமக்களிக்கும் கால ஆவணங்களாகும். பாண்டியரின் காசுகள் கீழ்க்கண்ட செய்திகளை நமக்கு உணர்த்தி நிற்கின்றன:

1.அவர்களின் ஆட்சிப் பரப்பு

2.அவர்கள் காலச் செல்வ நிலை

3.அரசர்களின் பெயர்கள், பட்டங்கள்

4.அக்கால வணிகத் தொடர்புகள்

5.அவர்களின் பொருளியல் அறிவு

**பாண்டியர் காசுகளின் வகைகள்:-**

பாண்டியர்கள் சங்கப் பாண்டியர், முற்காலப் பாண்டியர், பிற்காலப் பாண்டியர் என்று அழைக்கப்படுகின்றனர். பிற்காலப் பாண்டியரின் ஆட்சிக் காலம் கி.பி.1190 இல் தொடங்கிக் கி.பி.1310 இல் முடிவதாக ஆய்வாளர் கொள்வர். இப்பிற்காலப் பாண்டியரின் காசுகள் பல்வகைப்

பெயர்களில் அழைக்கப்பட்டன. அவை கழஞ்சு, வராகன், காசு, பொன், அச்சு என்ற பெயர்களில் வழங்கப்பட்டன. பொதுவாக "கழஞ்சு" என்ற காசே அதிகப் புழக்கத்திலிருந்தன. இது 52 நெல் மணியளவு எடைக்குச் சமம் (Appadurai.A. P:709). வராகன் என்பது சாளுக்கியர் வெளியிட்ட காசுகளாகும். அவர்களுடன் கொண்ட தொடர்பின் காரணமாய்ப் பாண்டியர்கள் இக்காசுகளை வெளியிட்டனர். இதுவும் 52 நெல் மணியின் எடையுடையதாகும். காசு என்ற தங்கக் காசின் எடை காலத்திற்குக் காலம் மாறியது. இது குறைந்தது 6 நெல் மணியின் எடையிலிருந்து அதிகம் 156 நெல் மணி வரை மாறுபட்டுக் காணப்பட்டது. ஒரு பொன் என்பது ஒரு கழஞ்சு காசிற்குச் சமமுடையதாக இருந்தது. பாண்டிய மன்னர்கள் பல விதமான செப்பு காசுகளை நாடு முழுவதும் வெளியிட்டுப் பொருளியல் வளம் பெருக்கினர்(சதாசிவ பண்டாரத்தார்.தி.வை. ப:222)

**பாண்டியரின் காசுகள்**

***1.சோனாடு கொண்டான் காசு:-***

மாறவர்மன் சுந்தரப் பாண்டியன் சோழநாட்டை வெற்றி கொண்ட பின் கி.பி. 1220 இல் இக்காசை வெளியிட்டான். இதன் முன் பக்கத்தில் இரண்டு மீன்கள் காணப்படுகின்றன. இதன் கீழ்ப் பிடரியில்லாத சிங்கம் ஒன்று காணப்படுகின்றது. இதைப் புலி என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதன் மறுபக்கம் பாண்டிய மன்னன் நின்ற வண்ணம் காணப்படுகின்றான். சோழனை வென்ற பிறகு அம்மன்னனின் அடையாளமான புலியை வென்றதாகக் கருதி இப்புலி சின்னத்தைப் பாண்டியன் பொரித்துள்ளான் (ARE.No:223/1961-62). புலிக்கு மேலே உள்ள மீன்கள் புலியை வென்றதாக இதிலுள்ள குறிப்பு உணர்த்தும். இத்துடன் முன்பக்கத்தில் உள்ள “சோனாடு கொண்டான்” என்ற வாசகம் இச்செய்தியை உறுதிப்படுத்தும்.

***2.கச்சி வழங்கும் பெருமாள் காசு:-***

இக்காசுகள் கி.பி. 1260 முதல் கி.பி.1265 க்கு இடைப்பட்ட காலத்தில் வெளியிடப்பட்டது. இதன் முன் பக்கம் 2 மீன்கள் காணப்படுகின்றன. அதனருகில் அங்குசம், திரிசூலம் போன்றவையும்

காணப்படுகின்றன. பின் பக்கத்தில் "கச்சி வழங்கும் பெருமாள்" என்ற வாசகம் காணப்படுகின்றது. *(ARE.No:222/1961-62).* இவ்வகை நாணயங்களில் "சு" என்ற வாசகம் காணப்படுகின்றது. எனவே இது சுந்தர பாண்டியனைச் சுட்டுவதாகக் கொள்ளலாம். பாண்டிய மன்னன் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி.1250-68) கச்சி என்றழைக்கப்படும் காஞ்சிபுரத்தை வென்றதால் அவன் "காஞ்சி கொண்டான்" என்றழைக்கப்பட்டான். தன் சிறப்பான வெற்றியைக் கொண்டாடும் முகமாக இக்காசுகளை அவன் வெளியிட்டிருக்கக் கூடும் *(Neelakanta Sastri. P:135).*

***3.எல்லாம் தலையானான் காசு:-***

இவ்வகையான பாண்டியர் காசுகளில் காணப்படும் "எல்லாம் தலையானான்" என்ற வாசகத்தைக் கொண்டு இக்காசுகள் முதலாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனால் வெளியிடப்பட்டதென்று ஆய்வாளர்கள் கருதுவர் (சதாசிவ பண்டாரத்தார்.தி.வை. ப:139). இதில் பொரிக்கப்படும் "சு" என்ற வாசகம் சுந்தர பாண்டியனே என்று கருதி இச்செய்தியை உறுதி செய்யலாம். இவ்வகையான நாணயங்கள் 5 விதமாகக் காணப்படுகின்றன.

1. முதல் வகை காசின் முன் பக்கத்தில் அரசனொருவன் நின்ற கோலமும், பின் பக்கத்தில் "எல்லாம் தலையானான்" என்ற வாசகமும் மூன்று வரிகளில் காணப்படுகின்றன *(Desikachari.T .P:34).*

2. இரண்டாம் வகைக் காசில் ஒரு மீன் செங்குத்தாகப் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் மேற்பகுதியில்"எல்லாம் தலையானான்" என்று பொறிக்கப்பட்டுள்ளது.

3. மூன்றாம் வகையில் இரண்டு மீன்கள் செங்குத்தாகக் காணப்படுகின்றன. இம்மீன்களைச் சுற்றி "எல்லாம் தலையானான்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

4. நான்காம் வகையில் இரண்டு மீன்கள் சாய்ந்த நிலையில் பொறிக்கப்பட்டுள்ளன. இரு மீன்களுக்குமிடையே "எல்லாம் தலையானான்" என்று பொறிக்கப்பட்டுள்ளது.

*5. ஐந்தாம் வகையில் இரண்டு மீன்களின் தலைப் பகுதிகளும் ஒன்று சேர்த்து ஒரு கூம்பு வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் ''எல்லாம் தலையானான்'' என்று பொறிக்கப் பட்டுள்ளது.*

*பிறிதொரு பாண்டிய மன்னனான மாறவர்மன் சுந்தரப் பாண்டியனும் ''எல்லாம் தலையானான்'' என்ற வாசமுடைய நாணயங்களை வெளியிட்டான். ஆனால் அவற்றில் அவன் உருவம் பொறிக்கப் பட்டுள்ளதால் இதன் வேறுபாடு எளிதில் விளங்கும் (ARE.No:86/1959-60).*

***4.கோதண்ட ராமன் காசு:-***

*கி.பி. 13 ஆம் நூற்றாண்டளவில் வெளியிடப்பட்ட இக்காசுகள் அனைத்திலும் ''கோதண்ட ராமன்'' என்ற பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. இதன் முன்பக்கத்தில் இரண்டு மீன்கள் செங்குத்தாகக் காணப்படுகின்றன. இதன் மறுபுறம் ஒரு வெண்கொற்றக் குடையின் கீழ்க் ''கோதண்ட ராமன்'' என்ற வாசகம் காணப்படுகின்றது. சில ஆய்வாளர்கள் இது கி.பி.1303 இல் பட்டத்திற்கு வந்த மூன்றாம் ஜடாவர்மன் சுந்தரப் பாண்டியன் வெளியிட்டான் என்று கருதுகின்றனர் (Brajadulal Chattopadhyaya.P:68). ஆனால் கோதண்ட ராமன் என்ற சிறப்பு பெயர் முதலாம் ஜடாவர்மனைச் சுட்டும் என்பதால் இக்காசுகளை அவனே வெளியிட்டிருக்க வேண்டும் (Subramanya Iyer.K.V. P:167)*

***5.சுந்தர பாண்டியன் காசு:-***

*பெரும்பான்மையான பாண்டிய மன்னர்கள் சுந்தர பாண்டியன் என்ற பெயரைக் கொண்டுள்ளதால் இவ்வகையான காசுகள் எம்மன்னனுடையது என்று எளிதில் அறியக்கூடவில்லை. இக்காசுகள் இரண்டு வகையாகப் புழக்கத்திலிருந்தன.*

*1. முதல் வகையான காசின் முன்பக்கத்தில் இரண்டு மீன்கள் செங்குத்தாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கிடையே ஒரு செங்கோல் காணப்படுகின்றது. இதற்கு மேல் ஒரு பிறைச்சந்திரன் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின்பக்கம் ''சுந்தர பாண்டியன்'' என்ற வாசகம் காணப்படுகின்றது. இதற்குக் கீழ்ச் செங்கோலும், பிறையும் காணப் படுகின்றன. பாண்டியர்கள்*

*சந்திரக் குலத்தைச் சார்ந்தவர்கள் என்ற செய்தியை இப்பிறை சந்திரன் உணர்த்தும். இவ்வகையான காசுகள் மதுரை திருமலை நாயக்கர் மஹால் அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.*

*2. மற்றொரு வகையான காசுகளின் முன் பக்கத்தில் அரசன் ஒருவன் நின்ற நிலையில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மறுபக்கத்தில் "சுந்தர பாண்டியன்" என்ற பெயர் காணப்படுகின்றது. இந்நாணயம் அளவில் சிறியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

***6.குலசேகரன் காசு:-***

*குலசேகரன் என்ற பெயருடன் திகழும் காசுகள் பாண்டிய நாட்டின் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குலசேகரன் என்ற பெயரைப் பல பாண்டிய மன்னர்கள் சூடிக் கொண்டதால் இதை யார் வெளியிட்டார் என்று உறுதியாகத் தெரியவில்லை. இந்நாணயத்தை முதலாம் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் வெளியிட்டுள்ளான் என்று ஆய்வாளர் கருதுவர். இவ்வகையான நாணயங்கள் மூன்று வகையில் காணப்படுகின்றன.*

*1. முதல் வகையான காசில் அரசனொருவன் நின்ற வண்ணம் உள்ளான். இவன் பக்கத்தில் "குலசேகரன்" என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது. அதனருகில் இரண்டு மீன்களும், செங்கோலும் காணப்படுகின்றன.*

*2. இரண்டாம் வகையான காசின் முன்பக்கத்தில் ஒரு அரசன் நின்ற நிலையில் காணப்படுகின்றான். பின் பக்கத்தில் "குலசேகரன்" என்ற பெயரும், வெண்கொற்றக் குடையும், கவரியும் காணப் படுகின்றன.*

*3. மூன்றாம் வகைக் காசின் முன்பக்கத்தில் ஒரு அரசன் நின்ற நிலை பொறிக்கப்பட்டுள்ளது. மறுபக்கம் ஒரு அரசன் உட்கார்ந்த நிலை காணப்படுகின்றது. இப்பக்கத்தில் "குல"என்ற சொல் காணப்படுகின்றது. இவ் வாசகத்தைக் கொண்டு முதலாம் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் (கி.பி.1268-1308) இந்நாணயத்தை வெளியிட்டதாகக் கொள்ளலாம் (Nagasamy.R. P:106)*

*7.பிறவகைப் பாண்டியர் காசுகள்:-*

*தஞ்சாவூரில் கிடைத்த பாண்டியரின் காசில் "ஸ்ரீராரா சுந்தர பாண்டியன்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 1311 ஆகும். இதில் முன்பக்கம் நிற்கும் மனித உருவமும், அதன் இடப்பக்கத்தில் விளக்கு ஒன்றும் உள்ளன. பின் பக்கத்தில் அமர்ந்த மனித உருவம் உள்ளது. அதன் இடப்பக்கத்தில் "ஸ்ரீராரா சுந்தர பாண்டியன்" என்று தமிழில் நான்கு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இதைக் குறுகிய காலம் பாண்டிய நாட்டை ஆண்ட ஜடாவர்மன் இராரஜராஜன் சுந்தரபாண்டியன் வெளியிட்டான்.*

*மதுரையில் கிடைத்த அவனி வேந்த இராமன் காசு கி.பி.1308 ஆம் ஆண்டைச் சார்ந்தது. இதன் முன்பக்கம்"அவனி வேந்த ராமன்" என்று தமிழில் நான்கு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கம் செங்குத்தாக உள்ள மீனின் மேல் குடை ஒன்றும் இரண்டு பக்கங்களில் இரண்டு வெண் சாமரங்களும் உள்ளன. இது தவிரத் திருநெல்வேலியில் கிடைத்த இதே போன்றதொரு காசில் "அவனி வேந்திர" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின் பக்கத்தில் செங்குத்தான மீனின் மேல் வெண்கொற்றக் குடை ஒன்று காணப்படுகிறது. மீனின் இரண்டு புறங்களிலும் இரண்டு குத்து விளக்குகள் பொறிக்கப்பட்டுள்ளன. இதுதவிரச் சில காசுகளில் "அவனி வென்றான்" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. மதுரையில் கிடைத்த வீரபாண்டியன் காசில் முன்பக்கம் "வீரபாண்டியன்" என்று தமிழில் இரண்டு வரிகள் பொறிக்கப் பட்டுள்ளன. பெயரின் கீழே இடது பக்கத்தில் ஒரு விளக்கும், இரண்டு மீன்களின் நடுவே ஒரு செங்கோலும் பொறிக்கப்பட்டுள்ளன. பின்பக்கத்தில் நிற்கும் மனித உருவமும், அதன் இடப்பக்கத்தில் ஒரு விளக்கும் உள்ளன. இதன் காலம் கி.பி. 1253 ஆகும்.*

*திருநெல்வேலியில் கிடைத்த செம்புக் காசில் "பரவீர ராமன்" என்று பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி.1315 ஆகும். இதன் முன்பக்கம் நிற்கும் மனித உருவமும், இடது பக்கத்தில் செங்குத்தான இரண்டு மீன்களும் உள்ளன. இவற்றின் நடுவே செண்டு ஒன்று உள்ளது. பின் பக்கத்ததில் அமர்ந்த மனித உருவமும், அதன் பக்கத்தில் "பரவீர ராமன்" என்ற பொறிப்பும்*

உள்ளன. இந்நாணயத்தைப் பராக்கிரமப் பாண்டியன் வெளியிட்டான். மதுரையில் கிடைத்த செப்புக்காசில் “கனையாவன வீரம்” என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 1253 ஆகும். இதன் முன்பக்கம் செங்குத்தான ஒரு மீனும் படுக்கை வாட்டில் ஒரு மீனும் பொறிக்கப்பட்டுள்ளன. பின் பக்கம் "கனையாவன வீரம்” என்ற சொல் பொறிக்கப்பட்டுள்ளது. இக்காசை ஜடாவர்மன் வீரபாண்டியன் வெளியிட்டான். மதுரையில் கிடைத்த பாண்டியரின் செப்புக்காசிலும் “கணையாவன வீரம்” என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 1253 ஆகும். இதன் முன்பக்கம் செங்குத்தாக ஒரு மீனும், படுக்கை வாட்டில் ஒருமீனும் பொறிக்கப்பட்டுள்ளன. பின் பக்கம் “கணையாவன வீரம்” என்று பொறிக்கப்பட்டுள்ளது. இக்காசையும் ஜடாவர்மன் வீரபாண்டியன் வெளியிட்டதாகக் கொள்ளலாம்.

திருநெல்வேலியில் கிடைத்த ஜடாவர்மன் சுந்தர பாண்டியனின் செப்பு காசின் முன்பக்கம் இரண்டு மீன்களும், நடுவில் செண்டும், குடையும் பொறிக்கப்பட்டுள்ளன. பின் பக்கம் “முடத்திய வெம பெருமாள்” என்று பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி 1304 ஆகும். மதுரையில் கி.பி.14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த காசு ஒன்று கிடைத்துள்ளது. இதன் முன்பக்கம் மனிதன் அமர்ந்த நிலையிலும் வலது பக்கத்தில் “பா” என்ற தமிழ் எழுத்து கூட்டெழுத்தில் உள்ளது. பின் பக்கத்தில் குத்துவாள் ஒன்றும், அதன் இரண்டு பக்கங்களிலும் சூரியச் சந்திரரும் உள்ளனர். அதன் பக்கத்தில் “வாளான் வழிதிறந்தான்” என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. பாண்டியரின் கல்வெட்டுகளில் காணப்படும் வாளான் வழிதிறந்தான் வகை காசுகள் இதுவேயாகும்.

தூத்துக்குடியில் கிடைத்த கலியுகராமன் காசு ஜடாவர்மன் வீரபாண்டியனால் வெளியிடப்பட்டது. இதன் காலம் கி.பி 1297 ஆகும். இதன் முன்பக்கம் இரண்டு பாதங்கள் உள்ளன. பின்பக்கம் வெண்சாமரமும், வெண்கொற்றக் குடையும் உள்ளன. இதன் கீழ் “கலியுக ராமன்” என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இது தவிரத் திருநெல்வேலியில் கிடைத்த இதே வகைக் காசின் முன்பக்கம் இரண்டு விஷ்ணுவின் பாதங்களும் பின் பக்கம் “கலியுக ராமன்” என்றும் பொறிக்கப்பட்டுள்ளது.

மதுரையில் கிடைத்த வீரபாண்டியன் செப்புக்காசு கி.பி 1253 ஆம் ஆண்டைச் சார்ந்தது. இதன் முன்பக்கம் நிற்கும் மனித உருவமும், பின் பக்கம் வீரபாண்டியன் என்ற எழுத்தும் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் அருகில் மூன்று மீன்களும், அதன் நடுவே ஒரு செண்டும் காணப்படுகின்றன. இலங்கையில் கிடைத்த பாண்டியரின் காசுகளில் இதே போன்ற மூன்று மீன் உருவங்கள் காணப்படுகின்றன. வீரபாண்டியன் இலங்கையை வென்றதால் தன் வெற்றியைச் சிறப்பிக்க இந்நாணயத்தை வெளியிட்டிருக்கக் கூடும்.

திருநெல்வேலியில் கிடைத்த மற்றொரு காசு கி.பி 14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் முன்பக்கம் இரண்டு மீன்களும், நடுவில் செண்டும் காணப்படுகின்றன. பின் பக்கம் குழல் ஊதும் கண்ணன் நின்ற நிலையில் உள்ளான். வேறுகுறிப்பு ஏதும் இல்லாததால் இதை யார் வெளியிட்டார் என்று அறியக் கூடவில்லை. திருநெல்வேலியில் கிடைத்த மற்றொரு செம்புக் காசில் நிற்கும் மனித உருவமும், பின் புறம் சூரியச் சந்திரரும் காணப்படுகின்றனர். அதன் கீழ் "ச ய உ" (42) என்ற தமிழ் எண்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர வேறு ஒன்றும் தெரிய வில்லை. இதன் காலம் கி.பி 14ஆம் நூற்றாண்டாகும்.

மதுரையில் கிடைத்த மற்றொரு காசில் முன்பக்கம் நிற்கும் மனித உருவமும், பின்பக்கம் அமர்ந்த மனித உருவமும் காணப்படுகின்றன. அதன் இடது கையின் கீழ்ச் செங்குத்தாக ஒரு மீனும் பக்கத்தில் ஒரு செண்டும் பொருத்தப்பட்டுள்ளன. இதை யார் வெளியிட்டார் என்ற குறிப்பு காணப்படவில்லை. இதன் காலம் 13-14 ஆம் நூற்றாண்டாகும்.

மதுரையில் கிடைத்த காசு ஒன்றில் "அவனி வேந்தராமன்" என்று பொறிக்கப்பட்டுள்ளது. முன் பக்கம் மீனின் மேல் குடையும், சாமரங்களும் உள்ளன. பின்பக்கம் "அவனி வேந்தராமன்" என்று பொறிக்கப்பட்டுள்ளது. அவனி வேந்தராமன் என்பது ஜடாவர்மன் சுந்தர பாண்டியனின் பட்டப் பெயராகும். எனவே இந்நாணயம் அவன் காலத்தில் வெளியிடப்பட்டதாகும். தஞ்சாவூரில் கிடைத்த நாணயம் ஒன்று கி.பி 1250 ஆம் ஆண்டைச் சார்ந்தது. இதன் முன்பக்கம் நிற்கும் மனித உருவமும், பின்பக்கம் அமர்ந்த உருவமும், அதன் இடது புறத்தில் "ஸ்ரீ சுந்தரர்" என்ற வாசகமும்

பொறிக்கப்பட்டுள்ளது. எனவே இது முதலாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனால் வெளியிடப்பட்டதாகும். மதுரையில் கிடைத்த செப்புக் காசில் முன்பக்கம் நிற்கும் மனித உருவமும், பின்பக்கம் படுக்கை வாட்டில் ஒரு மீனும், அதன் கீழே "சுந்தர" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 1250 ஆகும். இதுவும் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனால் வெளியிடப் பட்டதாகும். தஞ்சாவூரில் முதலாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் காசு கிடைத்துள்ளது. இதன் காலம் கி.பி.1218 ஆகும். இதன் முன்பக்கம் நிற்கும் மனித உருவமும், பின் பக்கம் "விக்ர" என்ற பெயரும் காணப்படுகின்றன. இதன் கீழே இரண்டு மீன்களும், நடுவில் ஒரு செண்டும் காணப்படுகின்றன. "விக்ர" என்ற எழுத்து விக்கிரமப் பாண்டியனின் சுருக்கமே ஆகும்.

முதலாம் ஜடாவர்மன் குலசேகர பாண்டியனின் காசு ஒன்று மதுரையில் கிடைத்துள்ளது. இதன் காலம் கி.பி.1190 ஆகும். இதன் முன்புறம் நிற்கும் மனித உருவமும், பின்புறம் குலசேகரன் என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. திருச்சியில் கிடைத்த இதே வகை காசில் முன்பக்கம் நிற்கும் யானையும், பின்பக்கம் "குலசேகரர்" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இப்பெயரின் கீழே செண்டும், மீனும் காணப்படுகின்றன. திருநெல்வேலியை ஆண்ட இம்மன்னன் வெளியிட்ட காசுகள் "ஆனை அச்சு" என்ற பெயரில் வழங்கப்பட்டன (ARE.No:312/1949-50). இதில் தவறாமல் யானை உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இது தவிரத் திருநெல்வேலியில் கிடைத்த இம் மன்னனின் மற்றொரு காசில் "ஸ்ரீ குலசேகரா" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. ஜடாவர்மன் சுந்தரப் பாண்டியக் காலத்தில் "புதுக்குளிகைப் பணம்", "அன்றாட நற்புதுக்காசு", "தனபாலன் குளிகை", "பழம் சோழியக் காசு" போன்ற காசுகள் வழக்கிலிருந்தன (ARE.No:439/1939). அக்கால 1 பணம் என்பது 100 சோழியக் காசு மதிப்புடையனவாய்த் திகழ்ந்தது (ARE.No:273/1941-42). பிற்காலப் பாண்டியர் காசுகளில் "சகல லோகன்", "புவனேக வீரன்" போன்ற பெயர்கள் காணப்படுகின்றன. இவை யாரைச் சுட்டுகின்றன என்று அறியக் கூடவில்லை. மேலும் இவ்வகை காசுகளை வெளியிட்டது யார் என்றும் உறுதியாய்த் தெரியவில்லை. இது தவிரப் பாண்டிய நாட்டில் ஈழக் காசும் பயன்படுத்தப்பட்டன (SII.Vol.2.No:7). பாண்டியர் ஈழத்தை வென்ற பின் இக்காசுகள்

புழக்கத்திலிருந்தன. இது 1/2 மாடை அல்லது 1/2 கழஞ்சு பொன்னுக்குச் சமமாகும். இக்காசின் ஒரு பக்கம் அரசன் நிற்பது போன்றும், பின்பக்கம் அமர்ந்திருப்பது போன்றும் பொறிக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை:-**

காசுகள் அல்லது நாணயங்கள் நம்புதற்குரிய அடிப்படைச் சான்றுகளாகும். எனவே ஆய்வாளர்கள் இவற்றைப் பொன்னே போன்று போற்றுவர். மேலும் அவர்கள் அரிதின் முயன்று பல்வகைக் காசுகளைத் தேடிக் கண்டெடுத்து நடந்து முடிந்த நிகழ்வுகளான வரலாற்றைக் கணிப்பர். இவ்வாறு நாணயங்களைச் சேரிக்கும் இயலுக்கு அல்லது துறைக்கு "நாணயவியல்" *(Numismatics)* என்று பெயர். இவ்வகையில் பாண்டியர் காசுகள் நாடு முழுவதும் ஆய்வாளர்களால் தேடிக் கண்டெடுக்கப்பட்டன. இது தவிர அவர்கள் ஆதிக்கத்தின் கீழிருந்த பகுதிகளிலும் அவர்களின் காசுகள் காணக் கிடைக்கின்றன. இக்காசுகள் அவர்களின் செல்வச் செழிப்பைச் சுட்டுவதுடன், அவர்களின் ஆட்சிப் பரப்பையும் அரிதியிட்டுக் காட்டுகின்றன. பல்வேறு பாண்டிய மன்னர்களின் சிறப்புப் பெயர்களையும் இக்காசுகளைக் கொண்டு அறியலாம். உலக வரலாற்றில் நீண்ட நெடுங்காலம் ஆட்சி புரிந்த ஒரே அரசு வம்சத்தவர் பாண்டியர் ஆவர். அவர்கள் பழமையும், பெருமையும் ஒருங்கே கொண்டவர்கள். அவர்களைப் போன்று நீண்ட பாரம்பரியம் கொண்ட அரசு மரபினர் உலக வரலாற்றில் ஒருவரும் இலர்.ஆனால் அவர்கள் ஆட்சிக் காலம் குறித்துத் தெளிவின்மையும், சந்தேகங்களும், குழப்பங்களும், மாறுபாடுகளும் ஆய்வாளர்களிடம் இன்னமும் இருந்து கொண்டு தான் இருக்கின்றன. இந்நிலையில் நமக்குக் கிடைக்கும் பாண்டியருடைய காசுகள் அவர்களின் இருண்ட வரலாற்றில் புத்தொளி பாய்ச்சுவதாக அமைந்துள்ளது. பாண்டியரின் நீண்ட ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட ஏராளமான காசுகள் பாதுகாப்பின்றிக் கால வெள்ளத்தில் மறைந்தன. நல்லூழின் பயனாய் அவையெல்லாம் கிடைத்திருக்குமாயின் செம்மையான பாண்டியர் வரலாற்றை உருவாக்கியிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்ய இயலவில்லை. அந்த வகையில் அழிவினின்று தப்பி நமக்கு மீதி கிடைத்திருக்கும் பாண்டியருடைய நாணயங்கள் வரலாற்றில் மிகவும் இன்றியமையாத இடத்தைப்

பெறுகின்றன. எனவே அவற்றைக் கொண்டு பாண்டியர் வரலாற்றை ஓரளவு கணிக்க இயலுகின்றது. பாண்டியரின் காசுகள் அவர்களின் கால நிலைய நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கும் காலப்பெட்டகங்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

***சுருக்கம் (Abbrevations):***

*1.ARE-Annual Report on Indian Epigraphy*

*2.SII-South Indian Inscriptions*

***பார்வை நூற்பட்டியல் (Bibliography):***


*1.Neelakanta Sastri.K.A,(1929), The Pandiyan Kingdom, London: Luzac & Co*

*2.Appadorai.A.(1990). Economic Conditions in South India (1000-15000), Chennai: University of Madras.*

*3.Desikachari.K.(1933), South Indian Coins, Trichninopoly: St. Josephs Industrial School Press*

*4.Chattopadhyaya.B.D.(1977), Coins and Currency System of South India, New Delhi: Munshilal Manoharlal Oriental Book Publishers.*

*5.Nagasamy.R.(1981), Tamil Coins, Chennai: Tamil Nadu Archaeological Department Publication*

*6.Subramanya Aiyer.K.V. (1933), Historical Sketches of Ancient Deccan, Madras: The Modern Printing Works.*

*7.Raman.K.V. (1972), Some Aspects of Pandiyan History in the Lights of Resent Discoveries, Chennai: University of Madras*

*8.பிள்ளை.கே.கே. (2013), தமிழக வரலாறு மக்களும் பண்பாடு, சென்னை: உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்.*

*9.இராஜசேகர தங்கமணி. மா. (1978), பாண்டியர் வரலாறு, சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.*

*10.இராமன்.கே.வி, (1977), பாண்டியர் வரலாறு, சென்னை: தமிழ்நாட்டுப் படநூல் நிறுவனம்.*

*11.சதாசிவ பண்டாடாரத்தார்.தி.வை. (1972). பாண்டியர் வரலாறு. சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.*

*12.நீலகண்ட சாஸ்திரி.க.அ. (1979), தென்னிந்திய வரலாறு, சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.*